IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO.12/2019
P.W.1-NETHAJI
DATE:18.02.2021

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

**எனக்கு ஆங்கிலம் ஓரளவுக்கு தெரியும். நான் தாக்கல் செய்திருக்கின்ற நிரூபண வாக்குமூலத்தில் என்ன விவரங்கள் உள்ளது என்று எனக்கு தெரியும். எனக்கு ஒரே ஒரு சகோதரி தான். இந்த வழக்கிடை சொத்து என் தந்தையார் வாங்கி என் தாயார் மீது பிரியப்பட்டு எழுதிக்கொடுத்த சொத்து. என் குடும்பத்திற்கு பாத்தியபட்ட மூதாதையர் சொத்து உள்ளதா என்றால் உள்ளது. என் தகப்பனார் என்னுடன் வந்திருக்கிறார். இந்த வழக்கினை என் தகப்பனார் தான் நடத்துகிறார் என்றால் நான் தான் நடத்துகிறேன். என் மாமியார் பெயர் சுலோச்சனா அம்மாள். என் தகப்பனார் பெயர் பக்தவச்சலம். என் தகப்பனார் என் மாமியார் பெயருக்கு ஒரு சொத்தினை எழுதி வைத்திருக்கிறார் என்றால் இல்லை. சாட்சி தாமே கூறுகிறார் என் தகப்பனார் ஒரு இடத்தில் கடன் வாங்கியிருந்தார். அந்த கடனை என் மாமியார் அடைத்தார். அதற்கான என் மாமியாருக்கு என் தகப்பனார் சொத்தினை கொடுத்தார். காட்டப்படும் ஆவணம் என்னுடைய மாமியார் பெயருக்கு என் தகப்பனார் எழுதிக்கொடுத்த ஆவணம் தான். அது பி.சா.ஆ.1ஆக குறியிடப்படுகிறது. என்னுடைய தகப்பனார் எனக்கு தானா செட்டில்மண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்திருக்கிறாரா என்றால் எனக்கு பதில் சொல்ல விருப்பம் இல்லை. சாட்சி மீண்டும் கேட்கிறார் அந்த செட்டில்மண்டிற்கும் இந்த சொத்திற்கும் என்ன சம்பந்தம். என்னுடைய தகப்பனாருக்கு என் மனைவி மீதுள்ள அபிமானத்தின் காரணமாக குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை என் மாமியாரின் பெயருக்கும் மற்றும் என் மனைவி பெயருக்கும் எழுதி வைத்த காரணத்தினால் என்னுடைய தாயார் அவருடைய பெயரில் உள்ள சொத்துக்களை தன் ஒரே மகள் பெயருக்கு தானா செட்டில்மண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் என்**

மனைவிக்கும் இந்த சொத்துகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. என் மனைவி பெயருக்கு எழுதி வைத்த சொத்து பூர்வீக சொத்து அல்ல. அவர் சுயமாக சம்பாதித்த சொத்தை தான் எழுதி வைத்தார். சாட்சி தாமே கூறுகிறார் எனக்கு மன உளைச்சல் ஏற்படுகிறது. 26.11.2018ல் எனது தாயாரால் என் சகோதரி பெயருக்கு எழுதி வைக்கப்பட்ட ஆவணம் அவரே விருப்பப்பட்டு எழுதி வைக்கப்பட்டது என்றால் இது அபாண்டமான பொய். சாட்சி தாமே கூறுகிறார் என் தாயாரை அடித்து உதைத்து வற்புறுத்தி எழுதப்பட்ட ஆவணம். என் தாயாரை அடித்து, உதைத்து எழுதி வாங்கப்பட்ட ஆவணம் என்று எனது பிராதிலோ என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடப்படவில்லை என்றால் இல்லை. என் தாயார் என் சகோதரி பிரபாவதி பெயருக்கு கே.வி.குப்பம் சார்பதிவாளர் பெயருக்கு செட்டில்மண்ட் எழுதினார். எனக்கு எழுதப்படிக்கத் தெரியும். சார்பதிவாளர் அலுவலத்தில் நகல் போட்டு வாங்குவது குறித்து தெரியுமா என்றால் தெரியும். நான் செட்டில்மண்ட் பத்திரத்தினை நகல் போட்டு வாங்கி பார்த்தேனா என்றால் நான் கவனிக்கவில்லை. என்னுடைய தாயார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் என் தாயாரும் என் தகப்பனாரும் சேர்ந்து தான் புகார் கொடுத்தார்கள். என்னுடைய வழக்கிலோ என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலோ காவல் நிலையத்தில புகார் கொடுத்த விவரத்தை பற்றி சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக எந்த விவரத்தையும் பிராதிலோ என்னுடய நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகாரின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு நினைவில்லை. என்னுடைய தங்கை வீட்டிற்கு என்னுடைய தாயாருக்கு உடல்நிலை சரியில்லாத போது என் தங்கை அழைத்து சென்று 5 நாட்கள் வைத்திருந்துவிட்டு என் தகப்பனார் சென்று அழைத்து வந்தார். வந்தபிறகு தான் செட்டில்மண்ட் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியும். சென்னாரெட்டி என்ற ஊரில் எங்களுக்கு நிலம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த நிலங்கள் இப்போது என் அண்ணன் தம்பியாகிய 3 பேர் பெயரில் உள்ளது. பிரபாவதிக்கு அந்த நிலத்தில் நாங்கள்

பங்கு கொடுத்தோமா என்றால் அதற்கு பதிலாகத்தான் 1 ஏக்கல் 33 சென்ட் நிலம் வாங்கி என் தங்கை பெயரில் எழுதி வைத்தோம். எந்த ஊரில் நிலம் வாங்கப்பட்டது என்றால் ஆயக்குளத்தில் வாங்கப்பட்டது. அதற்குண்டான ஆவணங்களையும் நான் சமர்பித்திருக்கிறேன். பிரதிவாதியின் கணவர் போலிசாக இருக்கிறார். பிரதிவாதியின் கணவர் உத்தியோகத்தில் இருப்பதால் கிரைய பத்திரத்தில் என் தகப்பனார் பணம் கொடுத்தது போல எழுதப்பட்டது என்றால் என் தகப்பனார் ஆசிரியராக பணிபுரிந்து சுய சம்பாத்தியம் பெற்றார். என் தகப்பனாரின் பணத்தை போட்டு தான் நிலத்தை என் சகோதரி பெயரில் வாங்கப்பட்டது. கிரைய பத்திரத்தில் இருக்கின்ற வாசகத்தை தவறாக பயன்படுத்திக்கொண்டு என் தகப்பனார் வாங்கிக்கொடுத்ததாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு சுகர் உள்ளது. இந்த இரண்டு கேள்விகளுக்கு மேல் என்னால் சாட்சியம் அளிக்க முடியாது.